24th February 1961]

Aids for disabled persons

*** 444 Q.—Sri P. G. MANICKAM :** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அங்கஹீனர்கள் பயன்படுத்தக்கூடிய சாதனங்களைத் தயார் செய்யக்கூடிய தொழிற்சாலை சென்னை மாகாணத்தில் எந்த இடத்தில் ஏற்படுத்தப்படும்?

(இ) இத்தொழிற்சாலை ஏற்படுத்தி நடத்துவதற்கான செலவினங்களுக்காக (1) மத்திய சமூக க்ஷேம நல போர்டு மூலமாகவும், (2) இந்திய சர்க்கார் மூலமாகவும், (3) சென்னை சர்க்கார் மூலமாகவும் எவ்வளவு உதவித் தொகை கிடைக்கும்?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) & (*b*) No proposal is under consideration for establishing a factory of the kind referred to by the Member. The Government have, however, sanctioned a scheme for starting an Artificial Limb and Orthopædic Splint-making Centre in the Government General Hospital, Madras. The entire expenditure on the scheme will be met from the State funds.

Sri P. G. MANICKAM : இவ்வாறு ஸ்டேட் பண்ட் மூலமாக ஒரு ஸ்கீம் ஏற்படுமானால் அதன் மூலமாக சாமான்களை விற்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அப்படி விற்கப்படுமானால் குறைந்த விலையிலோ அல்லது மிகவும் ஏழ்மையாக உள்ளவர்களுக்கு இலவசமாகவோ கொடுப்பதற்கு அரசாங்கம் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்தச் சாமான்கள் எல்லாம் தயார் பண்ணியபிறகு அதை விலைக்கு விற்கும்போது விலையைக் குறைக்கலாமா என்பதுபற்றி யோசிக்கப்படும்.

Gramasevaks (Houses)

*** 445 Q.—Sri S. RAMALINGA PADAYACHI :** கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் நமது மாநிலத்தில் எந்தெந்த வட்டார அபிவிருத்திப் பகுதிகளில் கிராம சேவக்குக்களுக்கு எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன?

(இ) எத்தனை அபிவிருத்திப் பகுதிகளில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை?

(உ) எல்லா அபிவிருத்திப் பகுதிகளிலும் ஓரேவித முறை கையாளாததற்குக் காரணமென்ன?

[24th February 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) One hundred and fifty-six houses have been constructed for Village Level Workers during 1960 in the following blocks :—

1 Natham
2 Tirupparankundram
3 Andipatti
4 Bodinaickanur
5 Dindigul
6 Palani
7 Batlagundu
8 Bargur
9 Rajapalayam
10 Sattur
11 Kariapatty
12 Paramakudy
13 Kalayarkoil
14 Singampuneri
15 Perianaickenpalayam
16 Avanashi
17 Sulur
18 Saidapet
19 Pallipet
20 Sriperumbudur
21 Uthiramerur
22 Kattangulathur
23 Valliyur
24 Munchira
25 Thiruvidamarudur
26 Tiruppanandal
27 Ammapet
28 Papanasam
29 Orathanad.

(*b*) 214.

(*c*) The type designs are uniform. Wherever the Blocks are in the intensive stage, quarters are being constructed for the Village Level Workers.

SRI S. RAMALINGA PADAYACHI : சில பகுதிகளில் கிராம சேவக்குகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில பிளாக்குகளில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. இம் மாதிரி பெரிய கிராமங்களில் வீடு கட்டிக்கொடுப்பதனால் பெரிய கிராமங்களில் இருந்து கிராமசேவக்குகள் சிறிய கிராமத்திற்கு வரவேண்டியிருக்கிறது. ஆகையால் எந்த ஊரிலே கிராம சேவக்குகள் வேலை செய்கிறார்களோ அந்த ஊரிலேயே வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது இன்டன்ஸிவ் ஸ்டேஜில் உள்ள எல்லா பிளாக்குகளிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுவருகின்றன. இந்த இன்டன்சிவ் ஸ்டேஜ் முடிந்து இரண்டாவது கட்டத்தில் இருக்கக்கூடிய வட்டாரங்களில் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு இப்போது நிதி இல்லை.

SRI V. SUBBIAH : இந்த கிராம சேவக்குகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கும்போது கேந்திரமாகவுள்ள கீ வில்லேஜ்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. சாதாரணமாக எக்ஸ்டன்ஷன் ஆபீசர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்களே அது எந்த விதமான உபயோகமும் இல்லை என்பது என்னுடைய அபிப் பிராயம். அவ்வாறு இல்லாமல் அவர்கள் இருக்கக்கூடிய இடங் களிலே வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் சொன்ன யோசனை கருத்தில் வைக்கப்படும்.

Gramasevikas (Houses)

* 446 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில ளிப்பாரா—

(அ) மாதர், குழந்தை நல அபிவிருத்தியில் தொண்டாற்றும் பெண்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கான அரசாங்க நிலையங்கள் சென்னை ராஜ்யத்தில் எத்தனை இருக்கின்றன ?

(இ) இந்நிலையங்கள் மூலமாக 1960-ல் இதுவரை எத்தனை பெண்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது ?